| | | |
|---|---|---|
| **O.S No.** | **:** | **253/2019** |
| **DATE** | **:** | **29.10.2025** |
| **பெயர்** | : | **லஷ்மி** |
| **கணவர் பெயர்** | : | **முருகன்** |

**பி.வா.சா.1 குறுக்கு விசாரணை**

1) நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள முகவரியில் 35 வருடங்களாக வசித்து வருகிறேன். தாவா சொத்து அதே தெருவில் தான் உள்ளது. தாவா சொத்து ஆதியில் வாதியின் முன்னோர்க்கு ஒரு பகுதியும், இன்னொரு பகுதி வேறொருவருக்கு சொந்தமானது. அந்த இருவருக்கும் புழக்கடை தனித்தனியாக இருந்தது. தாவா சொத்தின் முன் பகுதி வாதியின் தந்தையார் வாதிக்கு தானமாக கொடுத்தது என்றால் இல்லை. தாவா சொத்தில் வாதிக்கு பின் பக்கம் உள்ளது. வாதிக்கு சொந்தமான பின் பக்கத்தின் நீளம், அகலம் எவ்வளவு என்றால் 20 X38 அடி, 10 ¼ X 38 மீட்டர் நாங்கள் வாங்கியிருக்கிறோம். தாவா சொத்தில் வாதி பங்கு எவ்வளவு என்றால் தற்போது எதுவும் இல்லை. தாவா சொத்தில் வாதிக்கு 1 அடி நிலம் கூட தற்போது இல்லை.

2) தாவா சொத்தில் வாதிக்கு கோரி உரிமைக்காக தாக்கல் செய்த ஆவணத்தை பார்த்தேன், ஆனால் அது என்னுடைய சொத்து. வாதியின் வீடும் அதே தெருவில் தான் உள்ளது. வாதி தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ 4 நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது அந்த ஆவணப்படி வாதிக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது. அந்த ஆவணத்தின் படி வாதிக்கு எவ்வளவு பாத்தியம் என்றால் என் சொத்து பற்றி எனக்கு தெரியும், அவருடைய சொத்து பற்றி எனக்கு தெரியாது.

3) வாதிக்கும், எனக்கும் தாவா சொத்து சம்பந்தமாக 2017 ம் வருடம் பிரச்சனை ஏற்பட்டது. 2010 ம் வருடம் தாவா சொத்தின் முன் பகுதியில் கட்டிய கட்டிடத்தால் தான் பிரச்சனை ஏற்பட்டது. முன் பகுதியில் கட்டிடம் கட்ட முனிசிபால்டியில் அனுமதி வாங்கினேன். அந்த அனுமதி எதுவும் நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தின் கதவு எண் 12 ஆகும். வாதியின் தந்தைக்கு தாவா சொத்தில் முன் பகுதியில் உரிமை இல்லை, பின் பகுதி மட்டும் தான் உள்ளது. அந்த பின் பகுதியை தான் நான் வாங்கினேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் பின் பகுதியை வாதியின் தந்தையிடமிருந்து என் மகள் கஜலஷ்மி வாங்கினார். சாட்சியிடம் வா.சா ஆ 3 காண்பிக்கப்பட்டது. அந்த ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தின் முன் பகுதி எதுவும் கிரையம் செய்யப்படவில்லை.

4) 2017 ம் வருடம் வாதிக்கும், எனக்கும் பிரச்சனை ஏற்பட்டது. அப்போது வாதி எனது மகள் கஜலஷ்மிக்கு எதிராக அசல் வழக்கு எண் 150/2018 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கஜலஷ்மி வாங்கிய சொத்தின்  கதவு எண்ணில் தான் அவருக்கு மேற்படி வழக்கில் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்பந்தமாக வாதி காவல் நிலையத்தில் புகார் அளித்ததை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என் கணவர் காவல் நிலையத்திற்கு சென்று விசாரணையில் அது சம்பந்தமாக ஆஜர் ஆனார் என்றால் இல்லை.

5) இந்த வழக்கு எதற்காக தொடுக்கப்பட்டுள்ளது என்றால் நான் கட்டிய கட்டிடத்தை இடிப்பதற்காக தொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய கட்டிடத்தை இடிக்க சொல்லிய சொத்தின் அளவு எவ்வளவு என்றால் 4 அடி அகலம், 8 ¾ அடி நீளம் ஆகும். நாங்கள் வாங்கிய எங்கள் சொத்து சாமிநாத முதலியாரிடமிருந்து குப்பம்மாளுக்கு வழங்கப்பட்டு அவரிடமிருந்து இந்திராணி வாங்கி எங்களுக்கு 1959 ல் கிரையம் வழங்கப்பட்டது.  மேற்சொன்ன 4 X 8 ¾ அடி இடமானது ரோடு ஒட்டி தெற்கு பக்கத்தில் அமைந்துள்ளது.

6) பிரதிவாதி சான்றாவணம் பி.வா. சா ஆ 1 ல் உள்ள சொத்து விவரத்தில் ரோடு பக்கம் நான் சொல்லும் 4  X 8 ¾ அடி இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பு சான்றாவணம் பி.வா.சா.ஆ 1ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின்

அளவுகள் சரிதான். அந்த 4 X 8 ¾ அடி அதற்குள் உள்ளடக்கம் ஆகவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தின் படி தெரு பக்கத்தில் எங்களுக்கு எந்த பாத்தியமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.